பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

08 08 2024 7 15
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. தேசத்தை கட்டமைப்பதற்கும், சமூக மாற்றத்திற்கும் முக்கிய கருவியாக கல்வி திகழ்வதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.
2. மருத்துவ காப்பீடு மீதான சரக்கு மற்றும் சேவை வரியை நீக்குவது குறித்து ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டம்தான் முடிவெடுக்கும் என்று நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.
3. மணிப்பூரில் நிவாரண முகாம்களில் அடிப்படை வசதிகளை மேற்கொள்ள 348 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு பீரேன் சிங் தெரிவித்துள்ளார்.
4. பங்ளாதேஷின் நோபல் பரிசு பெற்ற பேராசிரியர் முகமது யூனஸ் தலைமையில் இடைக்கால அரசு இன்று பதவியேற்கிறது.
5. பாரிஸ் ஒலிம்பிக் ஹாக்கிப் போட்டியில் வெண்கலப் பதக்கத்திற்கான ஆட்டத்தில் இந்தியா இன்று ஸ்பெயினை எதிர்கொள்கிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

தேசத்தை கட்டமைப்பதற்கும், சமூக மாற்றத்திற்கும் முக்கிய கருவியாக கல்வி திகழ்வதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

நியுசிலாந்து சென்றுள்ள குடியரசுத் தலைவர், வெலிங்டனில் இன்று நடைபெற்ற சர்வதேச கல்வி தொடர்பான மாநாட்டில் அவர் உரையாற்றினார்.

தரமான கல்வியை அளிப்பதற்காக இந்தியாவில் அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளையும் அவர் எடுத்துரைத்தார்.

முன்னதாக நியுசிலாந்து அரசு மாளிகையில் திருமதி திரௌபதி முர்முவுக்கு அந்நாட்டு கலாச்சார முறைப்படி அணிவகுப்புடன் கூடிய மரியாதை அளிக்கப்பட்டது.

குடியரசுத் தலைவர் இன்று அந்நாட்டு கவர்னர் ஜெனரல் டாமி **cindy kiro** - பிரதமர் திரு கிறிஸ்டோபர் **Luxon** ஆகியோரையும் சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்துகிறார்.

அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு வின்ஸ்டன்ட் பீட்டரையும் சந்தித்து அவர் பேச்சு நடத்தவுள்ளார்.

**[]<<<>>>[]**

நடப்பு நிதி ஆண்டுக்கான நிதி மசோதா நேற்று மக்களவையில் சில திருத்தங்களுடன் நிறைவேறியது.

முன்னதாக மசோதா மீது நடைபெற்ற விவாத்திற்கு பதிலளித்து பேசிய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், வரிச்சட்டங்களை மத்திய அரசு எளிமைப்படுத்தி உள்ளதாகக் கூறினார்.

கடந்த பத்து ஆண்டுகளில் பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு வரிச்செலுத்தும் முறையில் மிகப்பெரிய மாற்றங்களை செய்ததாக அவர் தெரிவித்தார்.

வரி தொடர்பான விஷயங்களில் வெளிப்படைத் தன்மை கொண்டுவரப்பட்டதாகவும், நடைமுறைகளும் எளிதாக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்கள் நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு அழைத்துச் செல்லும் என்றும், வேலைவாய்ப்புக்களை அதிகரிக்கும் என்றும் தெரிவித்தார்.

ரியல் எஸ்டேட் துறையில் புதிய முதலீடுகளை ஈர்க்கும் வகையில் நிதி மசோதாவில் சில திருத்தங்களையும் அமைச்சர் தாக்கல் செய்தார்.

இந்த மசோதா மீது நடைபெற்ற விவாதத்தில் பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மருந்து பொருட்கள், காப்பீட்டு பிரிமியம் மீதான சரக்கு மற்றும் சேவை வரியை அரசு திரும்பப்பெற வேண்டுமென்று கோரிக்கை விடுத்தனர்.

இதற்கு பதிலளித்த நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், மருத்துவ காப்பீடு மீதான 18 சதவீத சரக்கு மற்றும் சேவை வரியை நீக்குவது குறிதது அதற்கான கவுன்சில்தான் முடிவு செய்ய வேண்டுமென்று தெரிவித்தார்.

சரக்கு மற்றும் சேவை வரி தொடர்பாக அரசுக்கு பல்வேறு யோசனைகள் வந்துள்ளதாகவும், அவை அனைத்தும் கவுன்சில் கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

**[]<<<>>>[]**

ஜம்மு-கஷ்மீர் யூனியன் பிரதேசத்துக்கு நிதி ஒதுக்க வகை செய்யும் இரண்டு மசோதாக்கள் மீதான விவாதம் நேற்று மாநிலங்களவையில் நடைபெற்றது.

விவாதத்தில் பங்கேற்று பேசிய காங்கிரஸ் மூத்த உறுப்பினர் திரு திக் விஜய் சிங், விலைவாசி உயர்வை குறைத்து ஏழைகள் மற்றும் வசதிபடைத்தோருக்கு இடையேயான இடைவெளியை போக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

நாடாளுமன்றத்தில் மத்திய அரசு தாக்கல் செய்துள்ள பட்ஜெட்டில் வேலைவாய்ப்பு பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான திட்டங்கள் எதுவும் இல்லை என்று கூறினார்.

புற்று நோய் தொடர்பான மூன்று மருந்துகளுக்கு சுங்க வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதை வரவேற்ற அவர், புற்று நோய் தொடர்பான இதர மருந்துகளுக்கும் இதேபோன்று சலுகை அளிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

விவாதத்தில் பேசிய பிஜேபி உறுப்பினர் திரு புவனேஸ்வர் கலிதா மத்திய பட்ஜெட் ஏழைகள், இளைஞர்கள், விவசாயிகள், மகளிர் ஆகியோரின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாக தெரிவித்தார்.

மனிதவள மேம்பாட்டுக்கும், சமூக நீதிக்கும் பட்ஜெட்டில் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்த மசோதா மீதான விவாதத்திற்கு நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று பதிலளிக்கிறார்.

**[]<<<>>>[]**

இந்தியாவில் அறிவியல் தொழில்நுட்பத்துறையில் வழங்கப்படும் மிக உயரிய விருதான தேசிய அறிவியல் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

விஞ்ஞானிகள், தொழில்நுட்ப வல்லுநர்கள், புதுமை கண்டுபிடிப்பாளர்கள், தனிநபர்கள் மற்றும் குழுக்களுக்கு ஆண்டுதோறும் இந்த விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டு விண்வெளி அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறைக்கு சிறப்பான பங்களிப்பை ஆற்றியதற்காக சந்த்ரயான்- மூன்று திட்டக்குழு இந்த விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இந்திய அறிவியல் நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் பேராசிரியர் ஜி பத்மநாபன் அறிவியல் ரத்னா விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

உயிரி அறிவியல் துறையில் அவர் ஆற்றிய சிறந்த பங்களிப்புக்காக இந்த விருது அவருக்கு வழங்கப்படவுள்ளது.

அறிவியல் ஸ்ரீ விருதுக்கு விஞ்ஞானிகள் அனந்த ராமகிருஷ்ணன், உமேஸ் வர்சனே, பீம்சிங், அடிமூர்த்தி **Adi**, சையத் வாஜா அகமது, சஞ்ஜய் பெஹாரி, ராகுல் முகர்ஜி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இம்மாதம் 23-ஆம் தேதி தேசிய விண்வெளித் தினத்தன்று தில்லியில் நடைபெறும் நிகழ்ச்சியில் இந்த விருதுகள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

மணிப்பூரில் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணப் பணிகளை மேற்கொள்ள 348 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு பீரேன் சிங் தெரிவித்துள்ளார்.

அம்மாநில சட்டப்பேரவையில் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த முதலமைச்சர், இந்த நிதி மாவட்ட துணை ஆணையர்கள் மூலம் நிவாரண முகாம்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த செலவிடப்படும் என்று கூறினார்.

மணிப்பூரையொட்டி இந்தோ – மியான்மர் எல்லையில் வேலி அமைக்க மத்திய அரசுடன் தொடர்ந்து மாநில அரசு முயற்சி மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எல்லையில் முக்கியமான பகுதிகள் கண்டறியப்பட்டு அவற்றை மத்திய அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் திரு பிரேன் சிங் கூறினார்.

**[]<<<>>>[]**

பீகார் மாநிலத்தின் நவாடா மாவட்டத்தில் நேற்று மின்னல் தாக்கி ஆறு பேர் உயிரிழந்தனர்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அம்மாநில முதலமைச்சர் திரு நிதிஷ்குமார், ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு தலா நான்கு லட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்கப்படும் என்று அவர் அறிவித்துள்ளார்.

இந்நிலையில் அம்மாநில பேரிடர் நிர்வாகத்துறை விடுத்துள்ள அறிக்கையில், கனமழை மற்றும் இடிமின்னல் நிலவும் போது விவசாய பணிகளுக்கு செல்ல வேண்டாம் என கிராம மக்களை கேட்டுக் கொண்டுள்ளது.

**[]<<<>>>[]**

ஆந்திர மாநிலம் காக்கிநாடா அருகே நடுக்கடலில் தத்தளித்த தமிழக மீனவர்கள் இரண்டு பேரை கடலோர காவல்படையினர் பத்திரமாக மீட்டுள்ளனர்.

இவர்கள் சென்ற படகு தீப்பிடித்தில் காயமடைந்த மீனவர் ஒருவரை கடலோர காவல்படையினர் உடனடியாக மீட்டு சமுத்ரா கப்பலில் முதலுதவி சிகிச்சை அளித்த பின்னர், காக்கிநாடாவில் உள்ள அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் தேசிய கைத்தறி தினத்தையொட்டி மாநில அளவில் திறன்மிகு நெசவாளர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட 60 பேருக்கு அமைச்சர் திரு துரைமுருகன் விருதுகளை வழங்கினார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், நெசவாளர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 20 லடசம் ரூபாய் மானியத்துடன் கூடிய வீடுகட்டுவதற்கான பணி ஆணைகளையும் அவர் வழங்கினார்.

முதியோர் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் நெவாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் வழங்குவதற்கான ஆணைகளையும் அமைச்சர் வழங்கினார்.

கைத்தறி ஆதரவு திட்டத்தின் கீழ் 23 கைத்தறி நெசவாளர்களுக்கு தறி உபகரணங்களையும், கைத்தறி வடிவமைப்பாளர்களுக்கு 30 ஆயிரம் ரூபாய் மாத ஊதியத்தில் பணி புரிவதற்கான ஆணைகளையும் திரு துரைமுருகன் வழங்கினார்.

[]<<<>>>[]

பங்ளாதேஷின் பிரபல பொருளாதார நிபுணரும், நோபல் பரிசு பெற்றவருமான பேராசிரியர் முகமது யூனூஸ் தலைமையில் இடைக்கால அரசு இன்று பதவியேற்கிறது.

டாக்காவில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய ராணுவ தளபதி ஜெனரல் வாக்கர் உஸ் ஸமான் இதனை தெரிவித்தார்.

பங்ளாதேஷில் அடுத்த மூன்று நாட்களுக்குள் அமைதி திரும்பும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

கடந்த சில நாட்களாக வன்முறையில் ஈடுபட்டவர்கள் மீது முறைப்படி வழக்கு பதிவு செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்றும் ராணுவ தளபதி கூறினார்.

இதற்கிடையே வன்முறை மற்றும் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் யாரேனும் நடந்து கொண்டால் உடனடியாக அருகில் உள்ள ராணுவ முகாமை தொடர்பு கொள்ளுமாறு அந்நாட்டு மக்களை ராணுவம் கேட்டுக் கொண்டுள்ளது.

[]<<<>>>[]

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் இந்தியா இன்று இரண்டு பதக்கங்களுக்கான போட்டிகளில் பங்கேற்கிறது.

ஹாக்கியில் வெண்கலப்பதக்கத்திற்கான போட்டியில் இந்தியா இன்று ஸ்பெயின் அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இந்திய நேரப்படி மலை மணி 5-30-க்கு தொடங்குகிறது.

ஈட்டி எறிதல் இறுதிப் போட்டியில் இந்தியாவின் நீரஜ்சோப்ரா பங்கேற்கிறார்.

ஆடவருக்கான 57 கிலோ மல்யுத்தப் போட்டியில் அமன் ஷெராவட்டும், மகளிர் பிரிவில் அன்ஷூவும் பங்கேற்கின்றனர்.

[]<<<>>>[]

மல்யுத்த போட்டியிலிருந்து ஓய்வு பெறுவதாக வினேஷ் போகத் அறிவித்துள்ளார்.

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டதை அடுத்து அவர் இந்த முடிவை அறிவித்துள்ளார்.

தாம் பெரிய அளவில் போராடிவிட்டதாகவும், இனிமேல் போராட சக்தி இல்லை என்றும் அவர் வேதனை தெரிவித்துள்ளார்.

வினேஷ் போகத் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் மூன்று முறை தங்கப்பதக்கம் வென்றுள்ள அவர், ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் ஒரு தங்கம் உள்ளிட்ட இரண்டு பதக்கங்களை பெற்றுள்ளார்.

ஒலிம்பிக் போட்டியில் தகுதி நீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்து வினேஷ் போகத் தாக்கல் செய்த மேல்முறையீடு மனு மீதான தீர்ப்பு இன்று அளிக்கப்படுகிறது.

**[]<<<>>>[]**

நேபாளத்தில் நடைபெற்ற மகளிர் வாலிபால் தேசிய லீக் போட்டியில் இந்தியா, நேபாளத்தை வென்று தங்கப்பதக்கத்தை கைப்பற்றியது.

**[]<<<>>>[]**

இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை 110 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

***End of News***